தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 11 நவம்பர் – 2015 ₹1.00

## புரிந்துணர்வு ஒப்பந்தம்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும், சாரோன் போக்பாண்ட் புட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே இரு தரப்பு புரிந்துணர்வு அடிப்படையில் குறிப்பாகத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை உருவாக்குதல், மாணவர் பரிமாற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல், பி.டெக். (கோழியின உற்பத்தித் தொழில் நுட்பம்) மாணவர்களுக்குத் தொழில்சார் வேலைவாய்ப்பிற்கு உதவுதல், தொழில் முனைவோராவதற்கு மாணவர்களுக்கு உதவுதல், சாரோன் போக்பாண்ட் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தருதல் ஆகியவை தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமையில் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் ம. முருகன், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் இடம்பெற்ற குழுவினர் **01.10.2015** முதல் **04.10.2015**வரை தாய்லாந்திற்கு வருகைபுரிந்து, சாரோன் போக்பாண்ட் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் டாக்டர் அனிக் பூன்நூன் அவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் **01.10.2015**அன்று கையொப்பம் இடப்பட்டது. மேலும், குழுவினர், சாரோன் போக்பாண்ட் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் நிர்வகித்துவரும் சிக்ஹு கற்றல் மையத்தைப் பார்வையிட்டு, அதன் வல்லுநர்களுடன் தொழில்திறன் சார்ந்தவர்களுக்குப் பொருத்தமான குறுகிய கால அறிவுசார் மேம்பாட்டுப் பயிற்சிகள் தொடங்குவதற்கான கலந்துரையாடலில் பங்கேற்றனர். மேலும், சாரோன் போக்பாண்ட் புட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் உள்ள புதிதறி அருங்காட்சியம், சுற்றுச்சூழல் கட்டுப்படுத்தப்பட்ட கோழிக் கொட்டில், தானியங்கும் கோழி இறைச்சிப் பதப்படுத்தல் பிரிவுகள் ஆகியவற்றை ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் ஏற்படுத்தும் வகையில் அவற்றையும் பார்வையிட்டனர். பாங்காக், கெசட்சார்ட் பல்கலைக்கழகத்தைத் துணைவேந்தர் தலைமையிலான குழுவினர் **02.10.2015**அன்று பார்வையிட்டு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள், படிப்புகள், பன்னாட்டு அளவில் மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்றத் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். அப்பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவப் புலத்தின் முதல்வர் டாக்டர் அபிநன் சுப்ரசெர்ட் மற்றும் கல்விப் பிரிவுக்கான இணை முதல்வர் டாக்டர் பதமபாம் அமவிசிட் ஆகியோருடன் மாணவர் மற்றும் ஆசிரியர் பரிமாற்றத் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் குறித்துக் கலந்துரையாடினர். மேலும், கால்நடை மருத்துவமனையின் வெளிச்சிகிச்சைப் பிரிவில் உள்ள சிடி ஸ்கேன் மற்றும் கதிரியக்க மருத்துவம் போன்ற நவீன நோய் கண்டறிதல் பிரிவுகளைப் பார்வையிட்டனர். கால்நடை மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் சையகோர்ன் திதியனபோர்ன் அவர்கள் மருத்துவமனையின் செயல்பாடுகளை விளக்கியுரைத்தார்.

### பரிசோதனை விலங்கின ஆய்வுக்கூடம் – திறப்பு விழா

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறையில் இந்திய அரசு மற்றும் பிபிஎஸ்ஆர்சி – இங்கிலாந்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் புதிதாகக் கட்டப்பட்ட பரிசோதனை விலங்கின ஆய்வுக்கூடத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் **09.10.2015**அன்று திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன், திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் கு. பொன்னுதுரை மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.



## ஆலோசனைக் குழுக் கூட்டம்




பல்கலைக்கழகத்தின் விளையாட்டுப் போட்டிக்கான 15ஆவது ஆலோசனைக் குழுக் கூட்டம், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 10.10.2015அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, விளையாட்டுப் போட்டிக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இந்திய அரசின் விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சகம், இந்திய விளையாட்டு ஆணையம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகிய நிதியுதவி முகமைகளுக்குத் திட்டங்கள் தயாரித்து அளிக்கும்படி குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் மற்றும் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியின் ஆலோசனைக் குழுத் தலைவர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் விளையாட்டுப் போட்டி அறிக்கை அளித்து, விவாதத்திற்கான நிகழ்ச்சிநிரல் அறிக்கையை முன்மொழிந்தார். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சார்ந்த விளையாட்டுப் போட்டிச் செயலாளர்கள் தங்கள் கல்லூரிகளின் விளையாட்டுப் போட்டிச் செயல்பாடுகள், உள்கட்டமைப்பு மற்றும் நிதித் தேவை குறித்த அறிக்கை அளித்தனர். ஆறு கல்லூரிகளின் முதல்வர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர். கல்லூரியின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ம. செல்லப்பாண்டியன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## பள்ளி மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகள்



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் பத்மஸ்ரீ டாக்டர் பி.வி. ராவ் பள்ளி மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையேயான 2015ஆம் ஆண்டு போட்டிகள் 08.10.2015முதல் 10.10.2015வரை நடைபெற்றன. திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த பல்வேறு பள்ளிகளின் 512 மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் ஆறு கல்லூரிகளைச் சார்ந்த 12 குழுக்கள் போட்டிகளில் பங்கேற்றன. ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட நான்காமாண்டு மாணவர்கள் செல்வி ஞா. பால அபிராமி மற்றும் செல்வி இரா. ஷோபனாஸ்ரீ ஆகியோர் வினாடிவினாப் போட்டியில் முதல் பரிசு வென்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 10.10.2015அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பங்கேற்று, சிறப்புரை ஆற்றிப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். வெங்கடேஸ்வரா ஹேட்சரிஸ் பிரைவேட் நிறுவனத்தின் துணைத் தலைமை மேலாளர் டாக்டர் சி.ஆர். செல்வகுமார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். முன்னதாக, கால்நடை மருத்துவத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் ஆர். ராம்பிரபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இறுதியில் இளநிலைப் பட்ட நான்காமாண்டு மாணவி சி. சரண்யா அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## பயிலரங்கு

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள உயிர்நுட்பத் தகவல் மையத்தில் "இன் சிலிக்கோ மருந்து உருவாக்கம்" குறித்த பயிலரங்கு, 05.10.2015 முதல் 09.10.2015வரை நடைபெற்றது. தமிழ்நாடு, கேரளா, குஜராத், ஹரியாணா மற்றும் உத்திர பிரதேசத்தைச் சார்ந்த 30 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் அவர்கள் 09.10.2015அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் பங்கேற்று, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

## நீலநாக்கு நோய்த் தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மையமும் இணைந்து "செம்மறியாடுகளில் நீலநாக்கு நோய்" குறித்த விழிப்புணர்வு முகாமைத் திருநெல்வேலி மாவட்டம், களக்குடி கிராமத்தில் 11.10.2015அன்று நடத்தின. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, சிறப்புரை ஆற்றி, 100 செம்மறியாட்டுப் பண்ணையாளர்களுக்கு இலவச இடுபொருட்களை வழங்கினார். அவர் தமது உரையில் பொருளாதார இழப்பைத் தடுக்கச் செம்மறியாடுகளுக்கு நீலநாக்கு நோய்க்கு எதிராகத் தடுப்பூசி போட வேண்டும் என்று பண்ணையாளர்களைக் கேட்டுக்கொண்டார். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் முகாம் அறிக்கை அளித்தார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.இ. கணேசன் அவர்கள் தலைமையுரை ஆற்றி, "நீலநாக்கு நோய்" குறித்த மடிப்பிதழ் வெளியிட்டார். திருநெல்வேலி, புதுவாழ்வுத் திட்டத்தின் ஆலோசகர் டாக்டர் குமரகுருபரன், நபார்டு உழவர் சங்கத் தலைவர் திரு. மணிவண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மொத்தம் 800 செம்மறியாடுகளுக்கு நீலநாக்கு நோய்க்கு எதிராகத் தடுப்பூசி போடப்பட்டது.

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் பல்கலைக்கழகத்தின் கால்நடை



நலக்கல்வி மையமும் இணைந்து செம்மறியாடுகளைத் தாக்கும் நீலநாக்கு நோய்க்கெதிரான தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு முகாமினை 17.10.2015 அன்று கரூர் மாவட்டத்தின் சோனம்பட்டி கிராமத்தில் நடத்தின. முகாமில் கால்நடை நலக்கல்வி மையத்தின் இயக்குநர் முனைவர் பி.ஐ. கணேசன் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றி, நீலநாக்கு நோய்க்கெதிரான தடுப்பூசியைச் செம்மறியாடுகளுக்கு அளிக்கும்படி பண்ணையாளர்களை அறிவுறுத்தினார். நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கிருஷ்ணமோகன் ரெட்டி அவர்கள் நீலநாக்கு நோய்க்கெதிரான தடுப்பூசியின் நன்மைகள் குறித்து விளக்கினார். நீலநாக்கு நோயைக் கட்டுப்படுத்தித் தடுத்தல் குறித்த மடிப்பிதழ் விநியோகிக்கப்பட்டது. முகாமில் 60 செம்மறியாட்டுப் பண்ணையாளர்களின் 1300 ஆடுகளுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

### வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தஞ்சாவூர் மிருகவதைத் தடுப்புச் சங்கமும் இணைந்து 11.10.2015அன்று செல்லப் பிராணிகளுக்கான இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாமைத் தஞ்சாவூர் அரசு பொருட்காட்சி வளாகத்தில் நடத்தின. முகாமில் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு சுமார் 200க்கும் மேற்பட்ட செல்லப்பிராணிகளுக்குத் தடுப்பூசி அளித்து, செல்லப் பிராணி வளர்ப்போரின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

### வனவிலங்கு வார விழா –2015




திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் "வனவிலங்குகளுடன் இணைந்து வாழுதல்" என்ற மையப் பொருளில் பல்வேறு போட்டிகள் நடத்தி, வனவிலங்கு வார விழா 12.10.2015முதல் 15.10.2015வரை கொண்டாடப்பட்டது. களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலயத்தின் இணை இயக்குநர் டாக்டர் ஆர். காஞ்சனா இ.வ.ப. அவர்கள் 15.10.2015அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, வனவிலங்கு குறித்த மடிப்பிதழ் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றி, போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். இளநிலைப் பட்ட நான்காம் ஆண்டு மாணவர் வி. சுபாஷ் வரவேற்புரை ஆற்றினார். இறுதியில் கால்நடை உடற்கூறியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் எஸ். முத்துகிருஷ்ணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

### உடற்செயலியல் வினாடிவினாப் போட்டி

இந்திய விலங்கின உடற்செயலியல் வல்லுநர்கள் சங்கம் சார்பில், கால்நடை உடற் செயலியல் பிரிவில் கல்லூரி அளவிலான வினாடிவினாப் போட்டி 29.10.2015அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. முதல்நிலைத் தகுதித்தேர்வுச் செயல்திறன் அடிப்படையில் தேர்வுபெற்ற நான்கு அணிகளில், மு. சபரிஅருள் மற்றும் கே. விக்னேஷ் அடங்கிய மாணவர் அணி இறுதிச் சுற்றில் வெற்றிபெற்று, 30.11.2015அன்று நடைபெறும் தென்மண்டல அளவிலான கால்நடை உடற்செயலியல் வினாடிவினாப் போட்டியில் பங்கேற்கின்றனர். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் க. ந. செல்வகுமார் அவர்கள் போட்டியைத் துவக்கிவைத்தார். கால்நடை உடற்செயலியல் மற்றும் உயிர்வேதியியல் துறையினைச் சார்ந்த ஆசிரியர்கள் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

### நேரடிப் பயிற்சி வகுப்பு

- பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் "கால்நடை மற்றும் கோழிப் பண்ணை மேலாளர்" குறித்த தொலைநிலைக் கல்விச் சான்றிதழ்ப் பயிற்சியின் நேரடிப் பயிற்சி வகுப்பு, மாதவரம் பால்பண்ணை, உழவர் இல்லத்தில் 05.10.2015முதல் 07.05.2015வரை நடைபெற்றது. பயிற்சியின் ஒரு பகுதியாக, பயிற்சியாளர்கள் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை, கோழியின ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றை 06.10.2015அன்று பார்வையிட்டனர். பயிற்சியின் நிறைவு விழாவில் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியில் மொத்தம் 10 பேர் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.
- பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககமும், வேலூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் இணைந்து இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மலைவாழ் மக்கள் குறித்த சார்புத் திட்ட நிதியுதவியில் "கறவை மாடு வளர்ப்பு" குறித்த தொலைநிலைக் கல்விச் சான்றிதழ்ப் பயிற்சிக்கான நேரடிப் பயிற்சி வகுப்பை 09.10.2015 மற்றும் 10.10.2015ஆம் தேதிகளில் ஏலகிரி மலையில் நடத்தின. தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்தார். வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். சரஸ்வதி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 80 பயனாளிகள் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### இறைச்சிக்கோழி வளர்ப்புப் பயிற்சி

கோழியின மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு "இறைச்சிக்கோழி வளர்ப்பு" குறித்த பயிற்சி, திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 07.10.2015 – 09.10.2015, 26.10.2015–28.10.2015ஆம் தேதிகளிலும்; கரூர் மற்றும் ராஜபாளையம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களில் முறையே 13.10.2015 – 15.10.2015, 28.10.2015–30.10.2015ஆம் தேதிகளிலும் நடைபெற்றது. மொத்தம் 112 திட்டப் பயனாளிகள் பயன்பெற்றனர்.

### இடுபொருட்கள் வழங்கல்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் மாநிலத் திட்டக்குழுவின் மாநிலச்



Posted on 28.11.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 27.11.2015

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ் “கே. பரமத்தியில் நீடித்த வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கு ஊரகக் கோழி வளர்ப்பு” திட்டத்தின் நலிந்த மற்றும் மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு 23.10.2015அன்று கூண்டுகள், கோழிக்குஞ்சுகள் மற்றும் தீவனம் ஆகிய இடுபொருட்கள் வழங்கப்பட்டன. இடுபொருட்களைக் கரூர் மாவட்ட ஆட்சியர் திருமதி எஸ். ஜெயந்தி இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். பல்வேறு பண்ணைக் கருவிகள், தீவனப் பொருட்கள், தடுப்பு மருந்துகள் குறித்த கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

### பசுந்தீவன விழிப்புணர்வுக் கூட்டம்

வேலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் வேலூர் மாவட்டத்தின் கீழ்வீதி கிராமத்தில் இயங்கிவரும் “வேலூர் மாவட்டத்தில் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் கால்நடைப் பசுந்தீவன உற்பத்தி” எனும் திட்டத்தின்கீழ் “பசுந்தீவன உற்பத்தி மற்றும் பயன்பாடு” குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் 27.10.2015அன்று நடைபெற்றது. வேலூர், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் கி. ராஜசேகரன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். வேலூர், கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தியின் துணை இயக்குநர் மருத்துவர் கே. செங்கோட்டையன் அவர்கள் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் 200 பயனாளிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர். மேலும் பயனாளிகளின் நன்மை கருதிக் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

### விருது

சேலம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவிப் பேராசிரியர் மருத்துவர் நா. ஸ்ரீபாலாஜி அவர்கள் ‘உலக வளரும் நாடுகளுக்கான நிலையான விவசாயம் சார்ந்த கால்நடை வளர்ப்பு’ என்ற தலைப்பில் 27.10.2015முதல் 30.10.2015 வரை தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு ‘இளம் விஞ்ஞானி விருது’ மற்றும் ‘சிறந்த அறிவியல் அறிக்கை வழங்கல் விருதினைப் பெற்றார்.

### நாட்டுநலப் பணித் திட்டம்

#### நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு I & II சார்பில் முன்னாள் குடியரசு தலைவர் மாண்புமிகு டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு 15.10.2015 அன்று இளைஞர் எழுச்சி தினம் கொண்டாடப்பட்டது.



கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். கல்லூரி மாணவ மாணவியர் ’இளைஞர் எழுச்சி’ எனும் தலைப்பில் சொற்பொழிவு மற்றும் கவிதை வழங்கினர். நான்காம் ஆண்டு மாணவப் பிரதிநிதி செல்வன் டி. மெய்யரசன் இந்நாளின் முக்கியத்துவம் குறித்த அறிக்கை வாசித்தார்.

#### ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

காந்தி ஜெயந்தியை முன்னிட்டுக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வளாகத் தூய்மைப்படுத்துதல் நிகழ்ச்சி 02.10.2015 அன்று நடைபெற்றது. 30 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மேலும்,



முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு 15.10.2015 அன்று இளைஞர் எழுச்சி நாள் ஊர்வலம் நடைபெற்றது. 36 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டு எழுச்சி நாள் வாசகங்களை ஒரத்தநாடு வீதிகளில் ஏந்திச் சென்றனர்.

### பணி ஓய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கோழியின அறிவியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர். ஆஷா ரஜினி அவர்கள் 31.10.2015அன்று பணி ஓய்வுபெற்றார். 25.10.1955இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருந்தாக்கவியல் மற்றும் நச்சூட்டியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். செல்வசுப்பிரமணியன் அவர்கள் 31.10.2015அன்று பணி ஓய்வுபெற்றார். 08.10.1955இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் முதுநிலை ஆய்வக உதவியாளர் திரு. என். ஆறுமுகம் அவர்கள் 31.10.2015அன்று பணி ஓய்வுபெற்றார். 25.10.1955இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.